திருவில்லிபுத்தூர், செப். 19: பிரம்மோற்ச விழாவை முன்னிட்டு, ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலை திருவல்லிபுத்தூரில் இருந்து நேற்று திருப்பதி புறப் பட்டுச் சென்றது.

திருப்பதி கோயில் பிரம் மோற்சவ விழாவிற்காக ஆண்டுதோறும் விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத் தூர் ஆண்டாள் கோயி லிலிருந்து ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலை மற்றும் கிளி, வஸ்திரம் ஆகியவை திருப்பதிக்கு கொண்டு செல்லப்படுகின் றன. திருப்பதியில் பிரம் மோற்சவ விழா தற்போது தொடங்கியுள்ளது. இதை யடுத்து திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில், நேற்று ஆண்டாளுக்கு சிறப்புபூஜை, தீபாராதனை செய்யப்பட்டு பெரிய மாலை சூட்டப்பட்டது.

பின்னர் ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலை மற்றும் கிளி, வஸ்திரம் ஆகியவை ஒரு கூடையில் வைக்கப்பட்டது. மேள தாளத்துடன் கோயில் யானை ஜெயமால்யதா மீது வைத்து மாட வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சுற்றி எடுத்து வரப்பட்டது. பின்னர் ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலை, கிளி, வஸ்திரம் அடங்கிய கூடை திருப்பதிக்கு புறப்பட்டது.

நிகழ்ச்சியில் கோயில் தக்கார் ரவிச்சந்திரன், செயல் அலுவலர் ராம ராஜா, ஆண்டாள் சொக் கலிங்கம் மற்றும் ஏராள மான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஆண்டாள் சூடிக் கொடுத்த இந்த மாலை, திருப்பதியில் 5ம் நாள் பிரம மோற்சவ விழா அன்று பெருமாளுக்கு அணிவிக் கப்படும். ஏற்பாடுகளை நாச்சியார் சாரிட்டி டிரஸ்ட் சார்பில் ராம்கோ நிறுவனங்களின் தலைவர் ராமசுப்பிரமணியராஜா மற்றும் அவரது குடும்பத் தினர் செய்திருந்தனர்.





**சூடிக்கொடுத்த சுடர்க்கொடி: திருப்பதி பெருமாளுக்கு அணிவிக்கப்பட உள்ள மாலையை கழுத்தில் சூடி, சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்த திருவில்லிபுத்தூர் ஆண்டாள். அடுத்த படம்: ஆண்டாள் சூடிய மாலை, கிளி, வஸ்திரம் ஆகியவை கூடையில் வைத்து திருப்பதிக்கு புறப்பட்டது. அருகில் கோயில் தக்கார் ரவிச்சந்திரன் மற்றும் ஆண்டாள் சொக்கலிங்கம்.**